# திரிகடுகம்

#1
அருந்ததி–க்–கற்பினர் தோள்–உம் திருந்திய
தொல்–குடி–இல் மாண்டார் தொடர்ச்சி–உம் சொல்–இன்
அரில் அகற்றும் கேள்வியார் நட்பு–உம் இ–ம்–மூன்று–உம்
திரிகடுகம் போலும் மருந்து

#2
தம்–குணம் குன்று த் தகைமை–உம் தா–இல்–சீர்
இன்–குணத்தார் ஏவின செய்தல்–உம் நன்கு–உணர்வு–இன்
நான்மறையாளர்–வழி ச் செலவு–உம் இ–ம்–மூன்று–உம்
மேல்–முறையாளர் தொழில்

#3
கல்லார்–க்கு இனன்–ஆ ஒழுகல்–உம் காழ்–க்–கொண்ட
இல்லாள்–ஐ க் கோல்–ஆல் புடைத்தல்–உம் இல்லம்
சிறியார்–ஐ க் கொண்டு புகல்–உம் இ–ம்–மூன்று–உம்
அறியாமை–ஆன் வரும் கேடு

#4
பகை–முன்னர் வாழ்க்கை–செயல்–உம் தொகை–நின்ற
பெற்றத்துள் கோல்–இன்றி ச் சேறல்–உம் முன்–தன்னை–க்–
காய்வான்–ஐ க் கை–வாங்கி–க்–கோடல்–உம் இ–ம்–
மூன்று–உம்
சாவ–உறுவான் தொழில்

#5
வழுங்கா த் துறை இழிந்து நீர் ப் போக்கு–உம் ஒப்ப
விழைவு இலா ப் பெண்டிர் தோள் சேர்வு–உம் உழந்து
விருந்தினன்–ஆய் வேற்றூர் புகல்–உம் இ–ம்–மூன்று–உம்
அரும்–துயரம் காட்டும் நெறி

#6
பிறர் தன்னை ப் பேணும்–கால் நாணல்–உம் பேணார்
திறன் வேறு கூறின் பொறை–உம் அறவினை–ஐ க்
காராண்மை–போல ஒழுகல்–உம் இ–ம்–மூன்று–உம்
ஊராண்மை என்னும் செருக்கு

#7
வாளைமீன் உள்ளல்–தலைப்படல்–உம் ஆள்–அல்லான்
செல்வ–க்–குடி–உள் பிறத்தல்–உம் பல்–சவை–இன்
அஞ்சுவான் கற்ற அரு–நூல்–உம் இ–ம்–மூன்று–உம்
துஞ்சு ஊமன் கண்ட கனு

#8
தொல்–அவை–உள் தோன்றும் குடிமை–உம் தொக்கு–இருந்த
நல்–அவை–உள் மேம்பட்ட கல்வி–உம் வெல்–சமத்து
வேந்து உவப்ப அட்டு ஆர்த்த வென்றி–உம் இ–ம்–மூன்று–
உம்
தாம் தம்மை க் கூற ப் பொருள்

#9
பெருமை–உடையார் இனத்தின் அகறல்
உரிமை–இல்–பெண்டிர்–ஐ க் காமுற்று வாழ்தல்
விழுமிய–அல்ல துணிதல் இ–ம்–மூன்று–உம்
முழு–மக்கள் காதலவை

#10
கணக்காயர் இல்லாத ஊர்–உம் பிணக்கு அறுக்கும்
மூத்தோர்–ஐ–இல்லா அவைக்களன்–உம் பாத்து–உண்ணு-த்–
தன்மை–இலாளர் அயல்–இருப்பு–உம் இ–ம்–மூன்று–உம்
நன்மை பயத்தல் இல

#11
விளியாதான் கூத்தாட்டு க் காண்டல்–உம் வீழ க்
களியாதான் காவாது–உரை–உம் தெளியாதான்
கூரை–உள் பல்–கால்–உம் சேறல்–உம் இ–ம்–மூன்று–உம்
ஊர்–எலாம் நோவது–உடைத்து

#12
தாளாளன் என்பான் கடன்–படா–வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்து இருக்க உண்ணுதான்
கோளாளன் என்பான் மறவாதான் இ–ம்–மூவர்
கேள்–ஆக வாழ்தல் இனிது

#13
சீலம் அறிவான் இளங்–கிளை சால–க்–
குடி–ஓம்ப–வல்லான் அரசன் வடு–இன்றி
மாண்ட–குணத்தான் தவசி என மூவர்
யாண்டும்–பெறல்–கு–அரியார்

#14
இழுக்கல் இயல்பிற்று இளமை பழித்தவை
சொல்லுதல்வற்று ஆகும் பேதைமை யாண்டும்
செறு–வ்–ஒடு நிற்கும் சிறுமை இ–ம்–மூன்று–உம்
குறுகார் அறிவு–உடையார்

#15
பொய் வழங்கி வாழும் பொறியறை–உம் கை திரிந்து
தாழ்விடத்து நேர்–கருதும் தட்டை–உம் ஊழ்–இன்–ஆல்
ஒட்டி வினை–நலம் பார்ப்பன்–உம் இ–ம்–மூவர்
நட்க–ப்–படாஅதவர்

#16
மண்–இன்–மேல் வான்–புகழ்–நட்டான்–உம் மாசு–இல்–சீர்
ப்
பெண்–இன்–உள் கற்பு–உடையாள் பெற்றான்–ஊம் உண்ணு
நீர் க்
கூவல் குறை–இன்றி த் தொட்டான்–உம் இ–ம்–மூவர்
சாவா உடம்பு எய்தினார்

#17
மூப்பு–இன்–கண் நன்மை–க்கு அகன்றான்–உம் கற்பு–
உடையாள்
பூப்பு–இன்–கண் சாரா த் தலைமகன்–உம் வாய்–ப்–பகை–
உள்
சொல் வென்றி வேண்டும் இலிங்கி–உம் இ–ம்–மூவர்
கல்வி–ப்–புணை கைவிட்டார்

#18
ஒருதலை–ஆன் வந்து–உறூஉம் மூப்பு–உம் புணர்ந்தார்–க்கு
இரு–தலை–உம் இன்னா ப் பிரிவு–உம் உரு–வ்–இன்–ஐ
உள்–உருக்கி த் தின்னும் பெரும்–பிணி–உம் இ–ம்–மூன்று–
உம்
கள்வர்–இன் அஞ்ச–ப்–படும்

#19
கொல் யானை–க்கு ஓடும் குணம்–இலி–உம் எல்–ல்–இல்
பிறன்–கடை நின்று ஒழுகுவான்–உம் மறம் தெரியாது
ஆடும் பாம்பு ஆட்டும் அறிவிலி–உம் இ–ம்–மூவர்
நாடும்–கால் தூங்குபவர்

#20
ஆசை பிறன்–கண் படுதல்–உம் பாசம்
பசிப்ப மடி–ஐ க் கொளல்–உம் கதித்து ஒருவன்
கல்லான் என்று எள்ள–ப்–படுதலும் இ–ம்–மூன்று–உம்
எல்லார்க்கும் இன்னாதன

#21
வருவாய்–உள் கால் வழங்கி வாழ்தல் செரு–வாய்ப்ப–ச்–
செய்தமை நாடா–ச்–சிறப்பு–உடைமை எய்த ப்
பல நாடி நல்லவை கற்றல் இ–ம்–மூன்று–உம்
நல–மாட்சி நல்லவர் கோள்

#22
பற்று என்னும் பாச–த்–தளை–உம் பல–வழி–உம்
பற்று–அறாது ஓடும் அவா–த்–தேர்–உம் தெற்ற–என ப்
பொய்த்துரை என்னும் புகை–இருள்–உம் இ–ம்–மூன்று–உம்
வித்து அற வீடும் பிறப்பு

#23
தானம் கொடுக்கும் தகைமை–உம் மானத்தால்
குற்றம் கடிந்த ஒழுக்கம்–உம் தெற்ற–என ப்
பல்–பொருள் நீங்கிய சிந்தை–உம் இ–ம்–மூன்று–உம்
நல்–வினை ஆர்க்கும் கயிறு

#24
காண் தகு மென்–தோள் கணிகை–வாய்–இன்சொல்–உம்
தூண்டில்–இன்–உள் பொதிந்த தேரை–உம் மாண்ட–சீர்
காழ்த்த பகைவர் வணக்கம்–உம் இ–ம்–மூன்று–உம்
ஆழ்ச்சி–ப்–படுக்கும் அளறு

#25
செருக்கு–இன்–ஆல் வாழும் சிறியவன்–உம் பைத்து–அகன்ற–
அல்குல் விலை பகரும் ஆய்தொடி–உம் நல்லவர்–க்கு
வைத்த அறப்புறம் கொண்டான்–உம் இ–ம்–மூவர்–
கைத்து–உண்ணூர் கற்றறிந்தார்

#26
ஒல்வது அறியும் விருந்தினன்–உம் ஆர்–உயிர்–ஐ க்
கொல்வது இடை நீக்கி வாழ்வான்–உம் வல்லிதின்
சீலம்–இனிது–உடைய–ஆசான்–உம் இ–ம்–மூவர்
ஞாலம் என–ப்–படுவார்

#27
உண்–பொழுது நீராடி உண்டல்–உம் என்–பெறினும்
பால்–பற்றி ச் சொல்லா–விடுதலும் தோல் வற்றி ச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இ–ம்–மூன்று–உம்
தூஉயம்–என்பார் தொழில்

#28
வெல்வது வேண்டி வெகுண்டு உரைக்கும் நோன்பி–உம்
இல்லது காமுற்று இருப்பான்–உம் கல்வி ச்
செவி–க்–குற்றம்–பார்த்து–இருப்பான்–உம் இ–ம்–மூவர்
உமி க் குற்று க் கை வருந்துவார்

#29
பெண் விழைந்து பின்–செலினும் தன்–செலவு–இல் குன்றாமை
கண் விழைந்து கையுறினும் காதல் பொருள்–கு இன்மை
மண் விழைந்து வாழ்–நாள் மடியாமை இ–ம்–மூன்று–உம்
நுண்–விழைந்த நூலவர் நோக்கு

#30
தன்–நச்சி ச் சென்றார்–ஐ எள்ளா ஒருவன்–உம்
மன்னிய செல்வத்து ப் பொச்சாப்பு–நீத்தான்–உம்
என்றும் அழுக்காறு–இகந்தான்–உம் இ–ம்–மூவர்
நின்ற புகழ்–உடையார்

#31
பல்–அவை–உள் நல்லவை–கற்றல்–உம் பாத்து உண்டு ஆங்கு
இல்லறம் முட்டாது இயற்றல்–உம் வல்லிதின்
தாள்–இன் ஒரு–பொருள் ஆக்கல்–உம் இ–ம்–மூன்று–உம்
கேள்வி–உள்–எல்லாம் தலை

#32
நுண்–மொழி நோக்கி ப் பொருள்–கொளல்–உம் நூல்–கு
ஏலா
வெண்–மொழி வேண்டினும் சொல்லாமை நல்–மொழி–ஐ ச்
சிற்றினம்–அல்லார்–கண் சொல்லல்–உம் இ–ம்–மூன்று–உம்
கற்று–அறிந்தார் பூண்ட கடன்

#33
கோல் அஞ்சி வாழும் குடி–உம் குடி–தழீஇ
ஆலம்–வீழ் போலும் அமைச்சன்–உம் வேல்–இன்
கடை–மணி போல் திண்ணியான் காப்பு–உம் இ–ம்–
மூன்று–உம்
படை–வேந்தன் பற்று விடல்

#34
மூன்று–கடன் கழித்த பார்ப்பான்–உம் ஓர்ந்து
முறை நிலை கோடா அரசு–உம் சிறை–நின்று
அலவலை–அல்லா–க்–குடி–உம் இ–ம்–மூவர்
உலகம்–எனப்படுவார்

#35
முந்நீர் த் திறை-இன் எழுந்து இயங்கா மேதை-உம்
நுண்-னூல் பெருங்-கேள்வி நூல் கறை கண்டான்-உம்
மை-ந்-நீர்மை-இன்றி மயல் அறுப்பான் இ-ம்-மூவர்
மெய்-ந்-நீர்மை-மேல் நிற்பவர்

#36
ஊன் உண்டு உயிர்கள்-கு அருள்-உடையெம் என்பான்-உம்
தான் உடன்பாடு-இன்றி வினை-ஆக்கும் என்பான்-உம்
காமுறு வேள்வி-இல் கொல்வான்-உம் இ-ம்-மூவர்
தாம்-அறிவர் தாம்-கண்டவாறு

#37
குறளை-உள் நட்பு-அளவு தோன்றும் உறல்-இனிய
சால்பு-இன்-இல் தோன்றும் குடிமை-உம் பால் போலும்
தூய்மை-உள் தோன்றும் பிரமாணம் இ-ம்-மூன்று-உம்
வாய்மை-உடையார் வழக்கு

#38
தன்னை வியந்து தருக்கல்-உம் தாழ்வு-இன்றி க்
கொன்னே வெகுளி பெருக்கல்-உம் முன்னிய
பல்-பொருள் வெவ்கும் சிறுமை-உம் இ-ம்-மூன்று-உம்
செல்வம் உடைக்கும் படை

#39
புலை மயக்கம் வேண்டி ப் பொருட்பெண்டிர் த் தோய்தல்
கலம் மயக்கம் கள் உண்டு வாழ்தல் சொலை-முனிந்து
பொய்-ம்-மயக்கம் சூது-இன்-கண் தங்குதல் இ-ம்-மூன்று-உம்
நன்மை-இலாளர் தொழில்

#40
வெகுளி–நுணுக்கு–உம் விறல்–உம் மகளிர்கள்–கு
ஒத்த ஒழுக்கம் உடைமை–உம் பாத்து–உண்ணும்
நல்–அறிவாண்மை தலைப்படல்–உம் இ–ம்–மூன்று–உம்
தொல்–அறிவாளர் தொழில்

#41
அலந்தார்–க்கு ஒன்று ஈந்த புகழ்–உம் துளங்கினும்
தன்–குடிமை குன்றா த் தகைமை–உம் அன்பு ஒடி
நாள்–நாளும் நட்டார் ப் பெருக்கல்–உம் இ–ம்–மூன்று–உம்
கேள்வி–உள்–எல்லாம் தலை

#42
கழகத்தால் வந்த பொருள் காமுறாமை
பழகினும் பார்ப்பார்–ஐ த் தீ–ப்–போல் ஒழுகல்
உழவின்–கண் காமுற்று வாழ்தல் இ–ம்–மூன்று–உம்
அழகு என்ப வேளாண்–குடி–க்கு

#43
வாய்–இன்–அடங்குதல் துப்புரவு–ஆம் மாசு–அற்ற
செய்கை அடங்குதல் திப்பியம்–ஆம் பொய்–இன்றி
நெஞ்சம் அடங்குதல் வீடு–ஆகும் இ–ம்–மூன்று–உம்
வஞ்சத்தின் தீர்ந்த பொருள்

#44
விருந்து–இன்றி உண்ட பகல்–உம் திருந்திழையார்
புல்ல ப் புடை–பெயரா க் கங்குல்–உம் இல்லார்–க்கு ஒன்று
ஈயாது ஒழிந்து அகன்ற–காலை–உம் இ–ம்–மூன்று–உம்
நோய்–ஏ உரன்–உடையார்–க்கு

#45
ஆற்றுன்–ஐ ஆற்று என்று அலைப்பான்–உம் அன்பு–இன்றி
ஏற்றுர்–க்கு இயைவ கரப்பான்–உம் கூற்றம்
வரவு உண்மை சிந்தியாதான்–உம் இ–ம்–மூவர்
நிரயத்து–ச்–சென்று வீழ்வார்

#46
கால்–தூய்மை–இல்லா க் கலி–மா–உம் காழ் கடிந்து
மேல்–தூய்மை–இல்லாத வெங்–களிறு–உம் சீறி க்
கறுவி வெகுண்டு உரைப்பான் பள்ளி இ–ம்–மூன்று–உம்
குறுகார் அறிவு–உடையார்

#47
சில்–சொல் பெருன்–தோள் மகளிர்–உம் பல்–வகை–உம்
தாள்–இன்–ஆல் தந்த விழு–நிதி–உம் நாள்–தொறும்
நா த் தளிர்ப்ப ஆக்கிய உண்டி–உம் இ–ம்–மூன்று–உம்
காப்பு–இகழல்–ஆகா ப் பொருள்

#48
வைதது–அன்–ஐ இன்சொல்–ஆ க் கொள்வான்–உம் நெய்
பெய்த
சோறு என்று கூழ்–ஐ மதிப்பான்–உம் ஊறிய
கைப்பது–அன்–ஐ க் கட்டி என்று உண்பான்–உம் இ–ம்–
மூவர்
மெய்–ப்–பொருள் கண்டு வாழ்வார்

#49
ஏவியது மாற்றும் இளங்–கிளை–உம் காவாது
வைது–எள்ளி ச் சொல்லும் தலைமகன்–உம் பொய் தெள்ளி
அ–ம்–மனை தேய்க்கும் மனையாள்–உம் இ–ம்–மூவர்
இம்மை–க்கு உறுதி இலார்

#50
கொள் பொருள் வெஃகி க் குடி அலைக்கும் வேந்தன்-உம்
உள்-பொருள் சொல்லா ச் சலமொழி-மாந்தர்-உம்
இல்-இருந்து-எல்லை-கடப்பாள்-உம் இ-ம்-மூவர்
வல்லே-மழை-அருக்கும்-கோள்

#51
தூர்ந்து ஒழுகி-க்-கண்-உம் துணைகள் துணைகள்-ஏ
சார்ந்து ஒழுகி-க்-கண்-உம் சலவர் சலவர்-ஏ
ஈர்ந்த-கல் இன்னுர் கயவர் இவர் மூவர்
தேர்ந்த-க்-கால் தோன்றும் பொருள்

#52
கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம் காமுற்ற
பெண்ணுக்கு அணிகலம் நாண்-உடைமை நண்ணும்
மறுமை-க்கு அணிகலம் கல்வி இ-ம்-மூன்று-உம்
குறி-உடையார்-கண்-ஏ உள

#53
குருடன் மனையாள் அழகு-உம் இருள்-தீர க்
கற்று-அறிவு-இல்லான் கதழ்ந்துரை-உம் பற்றிய
பண்-இன்-தெரியாதான் யாழ்-கேட்பு-உம் இ-ம்-மூன்று-
உம்
எண்ணின் தெரியா-ப்-பொருள்

#54
தன்-பயம்-தூக்கார்-ஐ ச் சார்தல்-உம் தான் பயவா
நன்-பயம் காய்வின்-கண் கூறல்-உம் பின்-பயவா க்
குற்றம் பிறர்-மேல் உரைத்தல்-உம் இ-ம்-மூன்று-உம்
தெற்றனவு இல்லார் தொழில்

#55
அரு–மறை காவாத நட்பு–உம் பெருமை–ஐ
வேண்டாது விட்டு ஒழிந்த பெண்பால்–உம் யாண்டானும்
செற்றம் கொண்டாடும் சிறு–தொழும்பு–உம் இ–ம்–மூவர்
ஒற்றுள் என–ப்–படுவார்

#56
முந்தை–எழுத்து–இன் வரவு உணர்ந்து பிற்பாடு
தந்தை–உம் தாய்–உம் வழிபட்டு வந்த
ஒழுக்கம் பெரு–நெறி சேர்தல் இ–ம்–மூன்று–உம்
விழுப்பநெறி தூரா–வ்–ஆறு

#57
கொட்டி அளந்து அமையா ப் பாடல்–உம் தட்டித்து ப்
பிச்சை புக்கு உண்பான் பிளிற்றல்–உம் துச்சு–இருந்தான்
நாளும் கலாம் காமுறுதல்–உம் இ–ம்–மூன்று–உம்
கேழ்வி–உள் இன்னுதன

#58
பழமை–ஐ நோக்கி அளித்தல் கிழமை–ஆல்
கேளிர் உவப்ப த் தழுவுதல் கேளிர்–ஆ த்
துன்னிய சொல்–ஆல் இனம்–திரட்டல் இ–ம்–மூன்று–உம்
மன்னன்–கு–இளையான் தொழில்

#59
கிளைஞர்–க்கு உதவாதான் செல்வம்–உம் பைங்–கூழ்
விளைவு–இன்–கண் போற்றான் உழவு–உம் இளையன்–ஆய் க்
கள் உண்டு வாழ்வான் குடிமை–உம் இ–ம்–மூன்று–உம்
உள்ளன–போல க் கெடும்

#60
பேஎய்–ப்–பிறப்பு–இல் பெரும்–பசி–உம் பாஅய்
விலங்கு–இன் பிறப்பு–இன் வெரூஉம் புலம்–தெரியா
மக்கட்பிறப்பு–இன் நிரப்பு இடும்பை இ–ம்–மூன்று–உம்
துக்க–ப்–பிறப்பு–ஆய்–விடும்

#61
ஐ–அறிவு–உம் தம்மை–அடைய–ஒழுகுதல்
எய்துவது எய்தாமை–முன் காத்தல் வைகலும்
மாறு–ஏற்கும் மன்னர் நிலை அறிதல் இ–ம்–மூன்று–உம்
வீறு சால் பேர்–அமைச்சர் கோள்

#62
நன்றி–ப்–பயன் தூக்கா நாண்–இலி–உம் சான்றார்–முன்
மன்று–இல் கொடும்பாடு உரைப்பான்–உம் நன்று–இன்றி
வைத்த அடைக்கலம் கொள்வான்–உம் இ–ம்–மூவர்
எச்சம் இழந்து வாழ்வார்

#63
நேர்வு அஞ்சாதார்–ஒடு நட்பு–உம் விருந்து அஞ்சும்
ஈர்வளை–ஐ இல்லத்து–இருத்தல்–உம் சீர்–பயவா–த்–
தன்மை–இலாளர் அயல்–இருப்பு–உம் இ–ம்–மூன்று–உம்
நன்மை பயத்தல் இல

#64
நல்–விருந்து ஓம்பல்–இன் நட்டாள்–ஆம் வைகலும்
இல் புறஞ்–செய்தல்–இன் ஈன்ற தாய் தொல்–குடி–இன்
மக்கள் பெறல்–இன் மனை–க்–கிழத்தி இ–ம்–மூன்று–உம்
கற்பு–உடையாள் பூண்ட கடன்

#65
அச்சம் அலை-கடல்-இன் தோன்றல்-உம் ஆர்வு-உற்ற
விட்டகலகில்லாத வேட்கை-உம் கட்டிய
மெய்-ந்-நிலை காணு வெகுளி-உம் இ-ம்-மூன்று-உம்
தம்-நெய்-இல் தாம்-பொரியும்-ஆறு

#66
கொழுநன்-ஐ-இல்லாள் கறை-ய்-உம் வழி-நிற்கும்
சிற்றாள்-இல்லாதான் கை ம் மோதிரம்-உம் பற்றிய
கோல்-கோடி வாழும் அரசு-உம் இவை-மூன்று-உம்
சால்பு-ஓடு பட்டது இல

#67
எதிர்-நிற்கும்-பெண்-உம் இயல்பு இல் தொழும்பு-உம்
செயிர் நிற்கும் சுற்றம்-உம் ஆகி மயிர் நரைப்ப
முந்தை-ப்-பழ-வினை-ஆய் த் தின்னும் இவை-மூன்று-உம்
நொந்தார் செய-க்-கிடந்தது இல்

#68
இல்லார்-க்கு ஒன்று ஈயும் உடைமை-உம் இ-வ்-உலகு-இன்
நில்லாமை-உள்ளும் நெறிப்பாடு-உம் எ-வ்-உயிர்-க்க்-உம்
துன்புறுவ செய்யாத தூய்மை-உம் இ-ம்-மூன்று-உம்
நன்று அறியும் மாந்தர்-க்கு உள

#69
அருந்-தொழில் ஆற்றும் பகடு-உம் திருந்திய
மெய்-ந்-நிறைந்து நீடு-இருந்த-கன்னி-உம் நொந்து
நெறி மாறி வந்த விருந்து-உம் இ-ம்-மூன்று-உம்
பெறும்-ஆறு அரிய-பொருள்

#70
கா—வ்—ஒடு அற—க்—குளம் தொட்டான்—உம் நா—வ்—இன்—ஆல்
வேதம் கரை—கண்ட பார்ப்பான்—உம் தீது—இகந்து
ஒல்வது பாத்து—உண்ணும் ஒருவன்—உம் இ—ம்—மூவர்
செல்வர் என—ப்—படுவார்

#71
உடுத்தாடை இல்லாது நீராட்டு—உம் பெண்டிர்
தொடுத்து—ஆண்டு அவை—ப்—போர் புகல்—உம் கொடுத்து அளிக்கும்
ஆண்மை உடையவர் நல்குரவு—உம் இ—ம்—மூன்று—உம்
காண அரிய என்—கண்

#72
நிறை நெஞ்சு உடையான்—ஐ நல்குரவு அஞ்சும்
அறன்—ஐ—நினைப்பான்—ஐ அல்—பொருள் அஞ்சும்
மறவன்—ஐ எ—வ்—உயிர்—உம் அஞ்சும் இ—ம்—மூன்று—உம்
திறவது—இன் தீர்ந்த பொருள்

#73
இரந்து கொண்டு ஒண்—பொருள் செய்வல் என்பான்—உம்
பரந்து ஒழுகும் பெண்பால்—ஐ ப் பாசம் என்பான்—உம்
விரி—கடல்—ஊடு செல்வான்—உம் இ—ம்—மூவர்
அரிய—துணிந்து—ஒழுகுவார்

#74
கொலை நின்று தின்று ஒழுகுவான்—உம் பெரியவர்
புல்லும்—கால் தான் புல்லும் பேதை—உம் இல்—எனக்கு—ஒன்று—
ஈக என்பவன்—ஐ நகுவான்—உம் இ—ம்—மூவர்
யாதும்—கடைப்பிடியாதார்

#75
வள்ளன்மை பூண்டான்–கண் செல்வம்–உம் உள்ளத்து
உணர்வு–உடையான் ஓதிய நூல்–உம் புணர்வு–இன்–கண்
தக்கது அறியும் தலைமகன்–உம் இ–ம்–மூவர்
பொத்து–இன்றி க் காழ்த்த மரம்

#76
மாரி–இனுள் வந்த விருந்து–உம் மனம் பிறிது–ஆ க்
காரியத்தில் குன்று க் கணிகை–உம் வீரியத்து
மாற்றம் மறுத்து உரைக்கும் சேவகன்–உம் இ–ம்–மூவர்
போற்றல்–கு–அரியார் புரிந்து

#77
கயவர்–ஐ க் கை–இகந்து–வாழ்தல் நயவர்–ஐ
நள்–இருள்–உம் கைவிடா–நட்டு–ஒழுகல் தெள்ளி
வடுவான வாராமல் காத்தல் இ–ம்–மூன்று–உம்
குடி–மாசு–இலார்–க்கு–ஏ உள

#78
தூய்மை–உடைமை துணிவு–ஆம் தொழில் அகற்று
வாய்மை–உடைமை வனப்பு–ஆகும் தீமை
மனத்தினும் வாய்–இன்–உம் சொல்லாமை மூன்று–உம்
தவத்தின்–தருக்கினர் கோள்

#79
பழி–அஞ்சான் வாழும் பசு–வ்–உம் அழிவு–இன்–ஆல்
கொண்ட அரும்–தவம்–விட்டான்–உம் கொண்டிருந்து
இல் அஞ்சி வாழும் எருது–உம் இவர்–மூவர்
நெல்–உண்டல் நெஞ்சு–இன்–கு ஓர்–நோய்

#80
முறை–செய்யான் பெற்ற தலைமை–உம் நெஞ்சு–இன்
நிறை–இல்லான் கொண்ட தவம்–உம் நிறை–ஒழுக்கம்
தேற்றாதான் பெற்ற வனப்பு–உம் இவை–மூன்று–உம்
தூற்று–இன்–கண் தூவிய வித்து

#81
தோள் வழங்கி வாழும் துறை போல் கணிகை–உம்
நாள்–கழகம் பார்க்கும் நயம்–இலா–ச்–சூதன்–உம்
வாசி–கொண்டு ஒண்–பொருள் செய்வான்–உம் இ–ம்–மூவர்
ஆசை–க்–கடல்–உள் ஆழ்வார்

#82
சான்றார்–உள்–சான்றான் என–ப்–படுதல் எ–ஞ்–ஞான்றும்
தோய்ந்தார்–உள்–தோய்ந்தான் என–ப்–படுதல் பாய்ந்து
எழுந்து
கொள்ளார்–உள்–கொள்ளாத–கூறாமை இ–ம்–மூன்று–உம்
நல்–ஆள் வழங்கும் நெறி

#83
உப்பு–இன்–பெருங்–குப்பை நீர் படின் இல்–ஆகும்
நட்பு–இன் கொழு–முளை பொய் வழங்கின் இல்–ஆகும்
செப்பம் உடையார்–மழை–அனையர் இ–ம்–மூன்று–உம்
செப்ப–நெறி–தூரா–ஆறு

#84
வாய்–நன்கு–அமையா–க்–குளன்–உம் வயிறு–ஆர த்
தாய் முலை உண்ணா க் குழவி–உம் சேய்–மரபு–இன்
கல்வி–மாண்பு இல்லாத மாந்தர்–உம் இ–ம்–மூவர்
நல்குரவு சேரப்பட்டார்

#85
எள்ளப்படும்—மரபிற்று—ஆகல்—உம் உள்—பொருள்—ஐ க்
கேட்டு மறவாத கூர்மை—உம் முட்டு—இன்றி
உள்—பொருள் சொல்லும் உணர்ச்சி—உம் இ—ம்—மூன்று—உம்
ஒள்ளிய—ஒற்றுள் குணம்

#86
அற்பு—ப்—பெருந்—தளை யாப்பு நெகிழ்ந்து ஒழிதல்
கற்பு—ப்—பெரும்—புணை காதல்—இன்—கைவிடுதல்
நட்பு—இன் நய—நீர்மை நீங்கல் இவை—மூன்று—உம்
குற்றம் தரூஉம் பகை

#87
கொல்வது தான்—அஞ்சான்—வேண்டல்—உம் கல்வி—க்கு
அகன்ற—இனம் புகுவான்—உம் இருந்து
விழு—நிதி குன்றுவிப்பான்—உம் இ—ம்—மூவர்
முழு—மக்கள்—ஆகல்—பாலார்

#88
பிணி தன்னை த் தின்னும்—கால் தான்—வருந்தும்—ஆறும்
தணிவு இல் பெருங்—கூற்று உயிர்—உண்ணும்—ஆறும்
பிணை—ச்—செல்வம் மாண்பு—இன்று—இயங்கல் இ—ம்—மூன்று—
உம்
புணை—இல்—நிலை கலக்கும்—ஆறு

#89
அருள்—இன்—ஐ நெஞ்சத்து—அடை—கொடாதான்—உம்
பொருள்—இன்—ஐ த் துவ்வான்—புதைத்து—வைப்பான்—உம்
இறந்து—இன்னு—சொல்லகிற்பான்—உம் இ—ம்—மூவர்
பிறந்தும்—பிறந்திலாதார்

#90
ஈதல்–கு–ச்–செய்க–பொருள்–ஐ அறனெறி–
சேர்தல்–கு ச் செய்க பெரு–நூல்–ஐ யாதும்
அருள்–புரிந்து சொல்லுக சொல்–ஐ இ–ம்–மூன்று–உம்
இருள்–உலகம்–சேராத–ஆறு

#91
பெறுதி–க்–கண் பொச்சாந்து உரைத்தல் உயிர்–ஐ
இறுதி–க்–கண் யாம் இழந்தேம் என்றல் மறு–வந்து
தன்–உடம்பு கன்றும்–கால் நாணுதல் இ–ம்–மூன்று–உம்
மன்னு–உடம்பு–இன்–தொழில்

#92
விழுத்திணை த் தோன்றுதவன்–உம் எழுத்து–இன்–ஐ–
ஒன்றும்–உணராத ஏழை–உம் என்றும்
இறந்துரை காமுறுவான்–உம் இ–ம்–மூவர்
பிறந்தும்–பிறவாதவர்

#93
இருள்–ஆய் க் கழியும் உலகம்–உம் யாதும்
தெருளாது உரைக்கும் வெகுள்வு–உம் பொருள்–அல்ல
காதல்படுக்கும் விழைவு–உம் இவை–மூன்று–உம்
பேதைமை வாழும் உயிர்க்கு

#94
நண்பு–இலார்–மாட்டு நசை–க்–கிழமை–செய்வான்–உம்
பெண்பால்–ஐ க் காப்பு–இகழும்–பேதை–உம் பண்பு இல்
இழுக்கு–ஆய சொல்லாடுவான்–உம் இ–ம்–மூவர்
ஒழுக்கம்–கடைப்பிடியாதார்

#95
அறிவு அழுங்க த் தின்னும் பசி—நோய்—உம் மாந்தர்
செறிவு அழுங்க த் தோன்றும் விழைவு—உம் செறுநர்—இன்
வெவ்—உரை—நோனு—வெகுள்வு—உம் இவை—மூன்று—உம்
நல்—வினை நீக்கும் படை

#96
கொண்டான்—குறிப்பு—அறிவாள் பெண்டாட்டி கொண்டன—
செய்—வகை செய்வான் தவசி கொடிது—ஒரீஇ
நல்லவை—செய்வான் அரசன் இவர்—மூவர்—
பெய்—என—ப்—பெய்யும்—மழை

#97
ஐங்—குரவர் ஆணை மறுத்தல்—உம் ஆர்வு—உற்ற
எஞ்சாத—நட்பு—இன்—உள் பொய்—வழக்கு—உம் நெஞ்சு—
அமர்ந்த
கற்பு—உடையாள்—ஐ த் துறத்தல்—உம் இ—ம்—மூன்று—உம்
நல்—புடை—இலாளர் தொழில்

#98
செந்—தீ முதல்வர் அறம் நினைந்து வாழ்தல்—உம்
வெஞ்—சின—வேந்தன் முறை—நெறியால் சேர்தல்—உம்
பெண்பால் கொழுநன்—வழி ச் செலவு—உம் இ—ம்—மூன்று—
உம்
திங்கள் மு—ம்—மாரி—க்கு வித்து

#99
கற்றார்—ஐ க் கைவிட்டு வாழ்தல்—உம் காமுற்ற
பெட்டாங்கு செய்து ஒழுகும் பேதை—உம் முட்டு—இன்றி
அல்லவை செய்யும் அலவலை—உம் இ—ம்—மூவர்
நல்—உலகம் சேராதவர்

#100
பத்திமை சான்ற படை-உம் பலர் தொகினும்
எ-த்-திசை-உம் அஞ்சா எயில்-அரண்-உம் வைத்து-அமைந்த
எண்-இன் உலவா இரு-நிதி-உம் இ-ம்-மூன்று-உம்
மண் ஆளும் வேந்தர்-க்கு உறுப்பு